(3) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் விவர அட்டவணைகளைத் திருத்த அரசு பிறப்பிக்க விருக்கும் வரைவு விதிகள்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் : "தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) 17-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், மேற்படி சட்டத்தின் 11, 111இ விவர அட்டவணைகளைத் திருத்தும் வண்ணம் மாநில அரசு பிறப்பிக்கவிருக்கும் கீழ்க் காணும் வரைவு விதிகள் மேற்படி பிரிவின் (3) உட்பிரிவில் கண்டுள்ளவாறு ஏற்பளிக்கப்பட வேண்டுமென ", முன் மொழிகிறேன்.

வரைவு விதி

தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) 17-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு மேற்படி சட்டத்தின் 11, 111 விவர அட்டவணைகளில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பின்வரும் திருத்தங்களைச் செய்கிறார்.

திருத்தங்கள்

(1) மேற்சொன்ன 11 விவர அட்டவணையில் (1) பத்தியில் 4 இனத்திற்கெதிராக உள்ள (2), (3) பத்திகளில் உள்ள பதிவுகளுக்குப் பதிலாகப் பின்வரும் பதிவுகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் .—

"100.00 150.00"

(2) மேற்படி 111 விவர அட்டவணையில் (1) பத்தியில் (4) இனத்திற்கெதிராக உள்ள (2) முதல் (5) வரையுள்ள பத்திகளில் காணும் பதிவுகளுக்குப் பதிலாக, பின்வரும் பதிவுகள் அமைத்துக் கொள்ளப் பட வேண்டும் :—

"12.00 36.00 18.00 54.00

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(இ) தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படவிருக்கும் வரைவு அறிவிப்பு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1966-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட் பிரிவின் (b) பகுதியின் கீழ் வெளியிடப்பட இருக்கிற அறிவிப்பின் கீழ்க்காணும் வரைவு அப்பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளபடி ஏற்கப்படுவதாக."